**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 73/2024 - PW-8**

| | |
|---|---|
| Name | Dr.கலைச்செல்வி |
| Husband/Father Name | இமயவரம்பன் |
| Village /Area | வேலூர் |
| Taluk | வேலூர் |
| Occupation | முதன்மை உதவி பேராசியர் |
| Age | 41 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 22.07.2026.

**(எதிரிகள் 1 முதல் 4 மற்றும் 6 ஆஜர்).**

**(சாட்சி காணொளி மூலம் அவர் பணிபுரியும் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, வேலூரிலிருந்து விசாரிக்கப்பட்டார்) துவங்கிய நேரம்: பிற்பகல் 02.55**

**முதல் விசாரணை :**

நான் தற்போது முதன்மை உதவி பேராசியராக சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.05.2020 அன்று அதே பணியிலிருந்த போது நெமிலி காவல் நிலைய ஆய்வாளரடமிருந்து பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின் படி குற்ற எண்.251/2020 சம்மந்தமான ஆண் பிரேதம் திரு.பாரதிதாசன் வயது.23 பிரேதத்தினை தலைமை காவலர் 2401 திரு.வெங்கடேசன் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு அதே நாள் பிற்பகல் 04.00 மணியளவில் பிரேத கூறாய்வு செய்தேன்.

**புற ஆய்வு** – ஆண் பிரேதம் மிதமான கட்டமைப்புடனும் ஊட்டசத்துடனும் காணப்பட்டது. மரண விறைப்பு உடல் முழுவதும் பரவி இருந்தது. உளர்ந்த ரத்த கரைகள் முகம் மற்றும் கை, கால்களில் ஆங்காங்கே காணப்பட்டது. உதடுகள் மற்றும் நக கணுக்கள் வெளிறி காணப்பட்டன.

**உடலில் காணப்பட்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட வெளிப்புற காயங்கள் பின் வருமாறு:–**

**காயம் 1**)செம்பழுப்பு நிற சிராய்ப்புகள் அ)4.2x3.1cm அளவில் கீழ் தாடையின் வலது புறத்திலும் ஆ)4.1x2.8cm அளவில் இடது தோள்பட்டையின் பின்புறத்திலும் இ)11.5x4.8cm அளவில் வலது கை முட்டியிலும் ஈ)5.4x3.2cm அளவில் வலது கையிலும் காணப்பட்டன.

**காயம் 2**) சீரற்ற வெட்டு காயங்கள் அ)குறுக்காக மூளை வரை

ஆழத்தில் அமைந்து 6.2x2.5cm அளவில் வலது புருவத்திலும் ஆ)குறுக்காக எலும்பு வரை ஆழத்தில் அமைந்து 4.5x1.8cm நெற்றியின் இடது புறத்திலும் இ)குறுக்காக எலும்பு வரை ஆழத்தில் அமைந்து 11.2x3.1cm இடது கண்ணம் மற்றும் இடது காதிலும் ஈ)சாய்வாக எலும்பு வரை ஆழத்தில் அமைந்து 7.3x2.1cm அளவில் உதட்டுக்கு மேலாக அதன் இடது புறத்திலும் உ)குறுக்காக எலும்பு வரை ஆழத்தில் 7.5x2.3cm பின் பக்க கழுத்தில் இடது புறத்திலும் காணப்பட்டன. காயத்தின் விளிம்புகள் சற்று கன்றி காணப்பட்டது.

**<u>அக ஆய்வு</u>** – தலை பகுதியை கூராய்வு செய்ததில் தலை தோலில் முன் பகுதியில் பரவலான ரத்த கசிவு காணப்பட்டது. கபாலத்தில் முன் பகுதியில் வெட்டு முறிவும் மேலும் நெற்றியின் வலது பக்கத்தில் வெட்டு முறிவும் காணப்பட்டது. மேலும் முக எலும்பு (Maxila) மேல் தாடை எலும்பில் வெட்டு முறிவு காணப்பட்டது.

கபாலத்தை பிளந்து பார்க்கையில் மூளை சுற்றிலும் பரவலான ரத்த கசிவு காணப்பட்டது. மேலும் முன் பக்க மூளையில் சுமார் 7.2cm அளவிலான காயம் காணப்பட்டது. முதுகு எலும்பு மற்றும் தண்டுவடம் இயல்பாக இருந்தன. கழுத்து பகுதியை கூராய்வு செய்ததில் நாவடி எலும்பு இயல்பாக காணப்பட்டது.

மார்பு பகுதியை கூராய்வு செய்ததில் நெஞ்சாங்கூடு மற்றும் விலா எலும்புகள் இயல்பாகவும் நுரையீரல்கள் இயல்பான அளவிலும் பிளந்து பார்க்கையில் வெளிறியும் காணப்பட்டது. இருதயம் இயல்பான அளவிலும் இருதய தமணிகள் இயல்பாக காணப்பட்டது.

வயிற்று பகுதியை கூராய்வு செய்ததில் இரைப்பையில் சுமார் 50ml அளவிலான கருப்பு நிற திரவம் காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பான அளவிலும் பிளந்து பார்க்கையில் வெளிறியும் காணப்பட்டன.

பிறப்புறுக்கள் இயல்பாக இருந்தது. உள்ளுறுப்புகள் ரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு அதில் மது உள்ளது என அறிக்கை பெறப்பட்டது. மேலும் ரத்த மாதிரி ரத்த வகை ஆய்வுக்காக அனுப்பப்பட்டது.

இறுதி கருத்தில் மேற்கண்ட நபர் பல்வேறு காயங்களின் விளைவினால் ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் ரத்த போக்கு காரணமாக இறந்திருக்க கூடும் என்று கூறி இறுதி அறிக்கை அளித்தேன். பிரேத பரிசோதனையுடன் கூடிய கருத்துரை என்னால் வழங்கப்பட்டது அது **அ.த.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

காயம் எண்.2 ல் குறிப்பிடப்பட்டுள்ள அ மற்றும் ஆ காயங்கள் கூர்மையான மற்றும் கனமான ஆயுதத்தால் தாக்கினால் தான் ஏற்படும். ஆயுதங்களை என்னிடம் காண்பித்து கருத்துரை பெறவில்லை என்று சொன்னால் அது போல் என்னுடைய அறிக்கையில் கூறவில்லை.

என்னை போலீசார் பிரேத பரிசோதனை செய்த அன்றே விசாரித்தாரா அல்லது மறுநாள் விசாரித்தாரா என்றால் அது குறித்து எனக்கு நியாபகம் இல்லை.

**மறு விசாரணை :** இல்லை.

**விசாரணை முடிந்த நேரம் பிற்பகல்**:- 03.25

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.07.22 18:02:01 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.